வி - Prayer

விசுவாசத்துடன் ஜெபியுங்கள்!

பரம பிதாவே, எங்களையும்,
எல்லோரையும் இன்றைக்கு
எல்லாவித

வசைச் சொற்களுக்கும்
வன்முறைகளுக்கும்
வஞ்சகங்களுக்கும்
வன்கண்களுக்கும்
வழிப்பறிகளுக்கும்
வழுவிப்போகுதலுக்கும்
வியாதிகளுக்கும்
விபத்துக்களுக்கும்
விபரீதங்களுக்கும்
விரோதங்களுக்கும்
விக்கினங்களுக்கும்
விலகிச் செல்லுதலுக்கும்
விழுந்து போகுதலுக்கும்

விலக்கிக் காத்தருளும்.

விஷப் பூச்சிகளுக்கும்,

பாம்புகளுக்கும்

விஷமிகளுக்கும்

வீண் செலவுகளுக்கும்

வீண் சிந்தனைகளுக்கும்

வீண் வார்த்தைகளுக்கும்

விக்கிரக ஆராதனைகளுக்கும்

வைராக்கியங்களுக்கும்

வேதனைகளுக்கும்

விலக்கிக் காத்தருளும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் மன்றாடி ஜெபிக்கிறோம் பிதாவே, ஆமென்.

கண்மணி போல் காப்பவரே!
கண்ணுறங்காமல் காப்பவரே!
கைவிடாமல் காப்பவரே!
உம்மைத் துதிக்கிறோம்.

சங்கீதம் 91, சங்கீதம் 121